


ஹமாஸின் தற்கொலைத் தாக்குதல்கள் குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம். தொண்ணூறுகளின் தொடக்கத்தில் ஒரு வெறிபோல பாலஸ்தீன் மக்கள் குறிப்பாக, யாசிர் அராஃபத்தின் அமைதி நடவடிக்கைகளில் நம்பிக்கையில்லாதவர்கள் ஹமாஸில் அலையலையாகச் சேர்ந்துகொண்டிருந்தார்கள். இதில் தற்கொலைப் படை வீரர்களாகத் தேர்வாகிறவர்களை உடனடியாக ரெகுலர் ராணுவத்திலிருந்து பிரித்து, தனிப் பயிற்சிக்கு அனுப்பிவிடுவார் யாஹியா அயாஷ்.

தனிப்பயிற்சிகள் பெரும்பாலும் லெபனானில் நடைபெறும். ஏற்கெனவே, நாம் சந்தித்த ஹிஸ்புல்லாவின் மக்னியா ஞாபகத்தில் இருக்கிறாரா? அவர்தான். அவரிடம்தான் முதலில் அனுப்புவார்கள்.

சுமார் ஒருவாரம் அல்லது பத்து நாள் மக்னியாவின் சொற்பொழிவுகளைக் கேட்டுவிட்டுத் திரும்பிய பிறகுதான், அவர்களுக்கு முறையான போர்ப்பயிற்சிகள் ஆரம்பமாகும். இது பெரும்பாலும் ஜோர்டனில் நடைபெறும். அல்லது எகிப்தில். கூடுமானவரை நாட்டு நடப்புகள் அவர்கள் காதுகளுக்குப் போகாமலேயே வைத்திருப்பார்கள். செய்தித்தாள் படிக்க முடியாது. டி.வி. பார்க்க முடியாது. அவலச் செய்திகளைக் கேட்க முடியாது.

ஒரு மாதிரி அனுமதிக்கப்பட்ட மகிழ்ச்சி மனநிலையில், அவர்களைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்பதை ஹமாஸ் ஒரு கொள்கையாகக் கடைப்பிடித்து வந்தது. ஒரு தற்கொலைத் தாக்குதல் உத்தேசிக்கப்பட்டு, அதற்கான போராளி தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், அவரை மேற்படி தற்கொலைக் கூட்டத்திலிருந்தும் பிரித்துவிடுவார்கள்.

அவர்களுக்குத் தனியே மீண்டும் வகுப்புகள், பாடங்கள், போதனைகள். மூளைச் சலவைகள், முடிந்தால் மீண்டும் லெபனான். மீண்டும் இமத் ஃபாயஸ் மக்னியா. சொர்க்கத்தில் காத்திருக்கும் சுகபோகங்கள் குறித்த இறுதி அறிவிப்புகள். தியாகத்தின் பெருமை குறித்த பிரசங்கங்கள்.

ஒன்று சொல்லவேண்டும். ஹமாஸின் தற்கொலை வீரர்களுக்கு இத்தனை முன்னேற்பாடுகள் கூடத் தேவையில்லை. அவர்கள் எதற்கும் துணிந்துதான் வந்திருந்தார்கள். பாலஸ்தீனத்தின் அரசியல் சூழலைப் பொறுத்தவரை, எந்த இயக்கத்திலும் சேராமல், போராடாமல், வெறுமனே வீட்டில் இருந்தால்கூட எந்தக் கணத்திலும் ராக்கெட் வந்து தாக்கி உயிரைக் கொண்டுபோகும் அபாயம் எப்போதும் உண்டு. சம்பந்தப்பட்டவரைக் கொல்லாத ராக்கெட்டுகள் கூட அவரது பெற்றோரையோ, சகோதர, சகோதரிகளையோ, வாரிசுகளையோ, பிற உறவினர்களையோ அவசியம் கொன்றிருக்கும்.

ஒரு தோராயக் கணக்கெடுப்பில் சுமாராக ஏழு வீடுகளுக்கு ஓர் உயிராவது இஸ்ரேலியத்

தாக்குதலில் இதுவரை பறிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இது 1964-க்குப் பிந்தைய நிலவரம்.

இத்தனை அபாயகரமான வாழ்க்கை, உலகின் வேறெந்தப் பகுதியிலும் கிடையாது. இப்போது என்றில்லை. எப்போதுமே.

ஆகவே, ஹமாஸின் தற்கொலைப் போராளிகள் எதற்கும் தயங்குவதே கிடையாது. மனத்தளவில் அவர்கள் எப்போதோ இறந்துபோனவர்களாகத்தான் பெரும்பாலும் இருப்பார்கள். தங்களை ஒரு வெடி குண்டாக மட்டுமே கருதுவது அவர்களது வழக்கம். வீசினால், வெடிக்க வேண்டியது வெடிகுண்டின் கடமை. பாலஸ்தீனச் சூட்டில் எந்தக் குண்டும் பிசுபிசுத்துப் போனதாகச் சரித்திரமில்லை.

இதில் வியப்புக்குரிய விஷயம், பல பெண்களும் ஹமாஸின் இந்தத் தற்கொலைப் படைப் பிரிவில் ஆர்வமுடன் வந்து பங்கேற்றிருப்பது. இஸ்ரேலிய ராணுவத்தினர், பாலஸ்தீன் பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக மேற்கொள்ளும் தொந்தரவு நடவடிக்கைகளில் வெறுப்புற்றுத்தான், அவர்களில் பலர், இத்தகைய போராளி இயக்கங்களில் இணைய ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில், ஆண் - பெண் என்கிற பாகுபாடெல்லாம் காணாமல் போய், பாதிக்கப்படும் அத்தனை பேருமே போராடத் துணியும் நிலைமை உண்டானபோது, துப்பாக்கி ஏந்தவும், பீரங்கிகளை இயக்கவும், வெடிகுண்டுகள் தயாரிக்கவும், ஆயுதங்களைக் கடத்தவும், போரிடவும் எப்படிப் பெண்கள் முன்வந்தார்களோ, அதே மாதிரி தற்கொலைப் படையினராகவும் அவர்கள் பணியாற்ற முன்வர ஆரம்பித்தார்கள்.

முதலில் இது, பிற போராளி இயக்கங்களிடையே மிகப்பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியது. இஸ்லாமியப் பெண்கள் இயக்கங்களுக்கு வருவது ஒரு விஷயம். அவர்கள் தற்கொலை வீரர்களாக வருவது இன்னொரு விஷயம். இரண்டுமே அதற்குமுன் நிகழ்ந்திராதவை. போராளிகளுக்குப் பெண்களின் ஆதரவு இருந்திருக்கிறது. அவர்கள் தங்குவதற்கு அடைக்கலம் தருவார்கள். உணவளிப்பார்கள். தமக்காகப் பாடுபடும் இயக்கத்தினர் என்கிற அக்கறை உணர்வுடன், தம்மால் இயன்ற அத்தனை உதவிகளையும் செய்வார்கள்.

ஆனால், யாரும் நேரடியாக அதற்குமுன் இயக்கங்களில் வந்து சேர்ந்ததில்லை. இது சரியா என்கிற குழப்பம் அனைவருக்கும் இருந்தது. இஸ்லாம் இதை அனுமதிக்குமா? பர்தா அணியும் பெண்கள் உடலெங்கும் வெடிமருந்து கட்டிக்கொண்டு போவார்களா? செய்யலாமா? தவறாகிவிடுமா? மத விரோதம் என்றாகிவிடுமா? இயக்கங்கள் தம் சுயநலத்துக்குப் பெண்களைப் பயன்படுத்திக்கொள்கின்றன என்கிற விமர்சனம் வருமா?

குழம்பினார்கள். மிகவும் குழம்பினார்கள். என்ன செய்வதென்று புரியாமல் தவித்தார்கள். அதே சமயம், 'ஒரு போராளியாக இயக்கத்தில் இணைந்தே தீருவேன்' என்று வந்து நின்று முரண்டு பிடிக்கும் பெண்களையும் அவர்களால் திருப்பி அனுப்ப முடியவில்லை.

அப்போதுதான், ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகையும் திரும்பிப் பார்க்க வைத்த ஷேக் அகமது யாசினின் புகழ்பெற்ற ஃபத்வா வெளியானது.

தவறில்லை. பெண்களும் போரிடலாம். பெண்களும் தற்கொலைப் படையில் சேரலாம். சுய விருப்பத்துடன். சுய ஆர்வத்துடன். சுய நினைவுடன். நிர்ப்பந்தங்கள் கூடாது. அது தவறு. எந்தப் பெண்மணியிடமும் 'நீ இயக்கத்துக்கு வா' என்று யாரும் அழைக்கக் கூடாது. அதே சமயம், ஆர்வமுடன் வருபவர்களை நிராகரித்துத் திருப்பி அனுப்புவதும் தவறு.

நடப்பது யுத்தம். பாதிக்கப்படும் அத்தனை பேரும் தம் உணர்ச்சிகளை வெளிக்காட்ட வழி தேடுவது இயல்பு. ஆர்வமுடன் யுத்தத்தில் பங்கேற்க பெண்கள் வரும்போது, அவர்களை அடக்கி வைக்க நினைப்பது சரியல்ல. நமக்கு அதற்கு உரிமை இல்லை. அவர்கள் விரும்பும் பயிற்சிகளை

அளிக்கலாம். அவர்கள் தேர்ந்தெடுக்கும் பிரிவில் பணியாற்ற அனுமதிக்க வேண்டும். அவர்களுக்கு எல்லா விதங்களிலும் ஒத்துழைப்புத் தரவேண்டும். தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

யாசினின் ஃபத்வா (என்றால் தீர்ப்பு.) அனைத்து இஸ்லாமிய இயக்கங்களையும் சிந்திக்க வைத்தது. அவர் சந்தர்ப்பவாதி அல்லர். அரசியல்வாதியும் இல்லை. ஹமாஸுக்கு இருக்கும் படைபலத்துடன் ஒப்பிடுகையில், வந்து சேரும் பத்திருபது பெண்கள் பெரிய விஷயமே இல்லை. அதற்காக வக்காலத்து வாங்கவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. தவிரவும், பெண்கள் படையை வைத்திருப்பது இன்னும் பல சிக்கல்களை உள்ளடக்கியது. பாலஸ்தீனின் நித்திய போர்ச்சூழலில் அவர்களைப் பராமரித்து, பயிற்சியளித்துக் களத்துக்கு அனுப்புவதே ஒரு தனி யுத்தம் போலிருக்கும்.

எனவே, அவர்கள் மௌனமாக ஏற்றுக்கொண்டார்கள். ஒரு முன்னுதாரணமாக அவர்கள் அத்தனை பேருக்கும் ராஜிவ் காந்தி படுகொலை இருந்தது.

பெண் போராளிகளைத் தற்கொலைப் படையினராக அனுப்புவதில் என்ன லாபம்?

அத்தனை சுலபத்தில் சந்தேக வளையத்துக்குள் வரமாட்டார்கள்.

பரிசோதனைப் பிரச்னைகள் அவ்வளவாக இருக்காது.

சுலபத்தில் மக்கள் கூட்டத்தில் அவர்களால் கலந்து முன்னேற முடியும். ஆண்கள் வழிவிடுவார்கள்.

தவிரவும் பர்தா அணியும் பெண்கள் விஷயத்தில், பாதுகாப்பு அதிகாரிகள் பெரும்பாலும் நாலடி தள்ளியே நின்று விசாரிப்பார்கள். இடுப்பில் கட்டியிருக்கும் வெடிகுண்டுக்கு எந்த ஆபத்தும் வராது.

ஒரு பெண் போராளி ஒரு காரியத்தைச் சாதித்து உயிர்விடும்போது, அது உண்டாக்கும் தாக்கம் அதிகமாக இருக்கும். இன்னும் பலருக்குப் போரா டும் வெறி வரும்.

இப்படியெல்லாம் யோசித்துப் பிற இயக்கங்களும் ஹமாஸைப் பார்த்துப் பெண் போராளிகளைச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டத் தொடங்கின.

இது இஸ்ரேலுக்குப் பெரிய தலைவலி ஆகிப்போனது. திடீரென்று எங்காவது ஒரு கார் வந்து எதன் மீதாவது மோதி வெடிக்கும். ஒரு பெண் உடல் பிறகு கண்டெடுக்கப்படும். காவல் அதிகாரிகள் நெருங்கிப் போய்ப் பரிசோதிக்கக் கூடத் தயங்குவார்கள். உடலை அவர்கள் குச்சியால் தொடுவதைப் பார்த்தால்கூட, சுற்று வட்டார மக்கள் கட்டிவைத்துக் கொளுத்திவிடுவார்கள்.

ஏதாவது பொதுக்கூட்டம் நடக்கும். முக்கியத் தலைவர்கள், அமைச்சர்கள் பேச வருவார்கள். பர்தா அணிந்த நூற்றுக்கணக்கான பெண்கள் சூழ்ந்திருக்க, யாரை எப்படிப் பரிசோதிப்பது? எந்த முகமூடிக்குள்ளும் அபாயம் ஒளிந்திருக்கலாம். முகத்தைக் காட்டுங்கள் என்று கேட்கமுடியாது. தனியே அழைத்துப் போய் பரிசோதிக்க முடியாது.

இந்தப் பிரச்னைக்குப் பிறகுதான், இஸ்ரேலியக் காவல் துறையில் தனியொரு பெண்கள் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இன்றைக்கு உலகம் முழுக்க பெண் போலீஸ், பெண் ராணுவ அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், இதனை மிகப்பெரிய அளவில், ஓர் இயக்கமாகத் தொடங்கி வைத்தது இஸ்ரேல்தான். இஸ்ரேல் ராணுவத்துக்குப் பெண்கள் வரவேற்கப்படுகிறார்கள் என்று ஊரெல்லாம்

போஸ்டர் அடித்து ஒட்டினார்கள். கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் பயிலும் பருவத்திலிருந்தே ஆர்வமுள்ள பெண்களை அடையாளம் கண்டு, போலீஸ் பயிற்சிக்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கத் தொடங்கினார்கள்.

அப்படிக் காவல் துறையில் சேரவரும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகைகளும் வழங்கப்பட்டன. கூடுதல் சம்பளம். கூடுதல் வசதிகள். அரசு சலுகைகள் இன்னபிற.

இந்த நடவடிக்கை சூடுபிடிக்க ஆரம்பித்தபோது, போராளி இயக்கப் பெண்கள் மட்டுமல்லாமல், பாலஸ்தீனில் எல்லா பெண்களுமே அவதிப்பட நேர்ந்தது. குழாயடியில், மார்க்கெட்டில், வழிபாட்டு இடங்களில், பிற பொது இடங்களில் எங்கே முஸ்லிம் பெண்கள் மொத்தமாக இருந்தாலும், இஸ்ரேல் காவல் துறையின் மகளிரணி வந்துவிடும். வழக்கமான பரிசோதனை என்கிற பெயரில், மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வைத்து உயிரை வாங்குவார்கள். எதிர்த்துக் கேள்வி கேட்போரை அடிக்கவும் தாக்கவும் தொடங்கினார்கள்.

இது, சாதுவான பெண்கள் பலரையே உசுப்பேற்றி, ஹமாஸில் சேரத் தூண்டியது. ஆறு குழந்தைகளின் தாயான மரியம் ஃபராஹத் (Mariam Farahat) என்கிற பெண்மணி, இஸ்ரேலியத் தாக்குதலில் தன்னுடைய மூன்று குழந்தைகளைப் பலி கொடுத்த பிறகு, எஞ்சிய குழந்தைகளை ஹமாஸில் கொண்டுவந்து தானே சேர்த்து, 'யுத்தத்தில் இவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக்கொண்டதோடு மட்டுமல்லாமல், தானும் ஹமாஸின் அரசியல் பிரிவில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கியது, மிகச் சமீபத்தில் நடந்த ஒரு விஷயம்.

காஸாவில் ஒரு சம்பவம் நடந்தது. இரண்டாவது இண்டிஃபாதா போராட்டம் நடந்துகொண்டிருந்த காலம். பேரணியில் சென்றுகொண்டிருந்த முஸ்லிம் பெண்களை, இஸ்ரேலியப் பெண் போலீஸ் படை தகுந்த காரணமில்லாமல் தாக்கி, கடும் ரத்தக் காயத்துக்கு உள்ளாக்கிய ஒரு சம்பவம், பாலஸ்தீன் முழுவதும் பெரிய அளவில் அதிருப்தி அலையை எழுப்பியிருந்தது.

நான்கு குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண்மணி, ஒருநாள் விறுவிறுவென்று ஹமாஸ் அலுவலகத்துக்கு வந்தார். உள்ளே அவர் யாரைப் பார்த்தார், என்ன பேசினார் என்று தெரியாது.

அடுத்த பத்தாவது தினம், டெல் அவிவ் நகரில் ஒரு முக்கியமான மார்க்கெட்டில் பட்டப்பகலில், அவர் தன்னைத்தானே வெடிக்கச் செய்து உயிரை விட்டு இருபத்தியேழு பேரின் உயிரைப் பறித்தார்.

சம்பவம் நடந்த நான்கு மாதங்களில், மீண்டும் இதேபோன்ற இன்னொரு சம்பவம் நடந்தது. தனது பத்து வயது மகனை அழைத்து வந்து, ஒரு ஹமாஸ் தலைவர் முன் நிறுத்தினார் ஒரு பெண்மணி. 'இனி இவன் உங்கள் பொறுப்பு. முறையான போர்ப்பயிற்சி அளியுங்கள். முடிந்தால் கொஞ்சம் கல்வி கொடுங்கள். இயக்கத்துக்காக இவனை நான் நன்கொடையாக அளிக்கிறேன். எனக்கு ஒரு வேலை இருக்கிறது' என்று சொல்லிவிட்டு, அதேபோல இடுப்பில் வெடிமருந்து பெல்ட் அணிந்து கொண்டு போய் வெடித்தார். ஏழு பேர் பலி.

ஹமாஸின் தற்கொலைப் படைப்பிரிவை யார் நிர்வகிக்கிறார்கள் என்று, பதினைந்து வருடங்களாக சிண்டைப் பிய்த்துக்கொண்டது இஸ்ரேலியக் காவல் துறை. கண்டுபிடிக்க முடியவில்லை. மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது தாக்குதல் நடக்கிறது. தடுக்க முடியவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். உளவுத்துறையை முடுக்கிவிட்டு, 'அந்தக் குறிப்பிட்ட பிரிவின் தலைவர் யார் என்று எப்படியாவது கண்டுபிடித்தாக வேண்டும்' என்று உத்தரவிட்டார்கள்.

கடந்த மே 2006-ல்தான் அவர்களால் அந்தத் தலைவர் யார் என்றே தெரிந்துகொள்ள முடிந்தது.